# 'பிபர்ஜாய்' புயல் முன்னேற்பாடுகள்: பிரதமர் ஆய்வு

## குஜராத்தில் 7,500 பேர் வெளியேற்றம்





பிபர்ஜாய் புயலை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து புது தில்லியில் திங்கள்கிழமை அதிகாரிகளுடன் ஆய்வு செய்த பிரதமர் நரேந்திர மோடி. (வலது) புயலை முன்னிட்டு குஜராத்தின் கட்ச் மாவட்டம் ஜக்காவ் கிராமத்திலிருந்து பாதுகாப்பான இடத்துக்கு வெளியேற்றப்படும் பொதுமக்கள்.

**புது தில்லி, ஜூன் 12:** அரபிக் கடலில் அதிதீவிர புயலாக உருமாறியுள்ள 'பிபர்ஜாய்' புயல், குஜராத் மாநிலத்தின் கட்ச் வளைகுடா பகுதியில் வரும் வியாழக்கிழமை (ஜூன் 15) கரையைக் கடக்கும் என உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான முன்னேற்பாடுகள் குறித்து பிரதமர் நரேந்திர மோடி திங்கள்கிழமை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பிரதமரின் முதன்மைச் செயலர் பி.கே.மிஸ்ரா, மத்திய அமைச்சரவைச் செயலர் ராஜீவ் கௌபா, மத்திய புவி அறிவியல் துறை செயலர் எம்.ரவிச்சந்திரன், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய உறுப்பினர் கமல் கிஷோர் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

புயலின் தாக்கத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கான தயார் நிலைகள் குறித்து அதிகாரிகளிடம் பிரதமர் கேட்டறிந்ததாக ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆய்வுக் கூட்டத்துக்குப் பின்னர் தனது ட்விட்டர் பக்கத்தில் பிரதமர் வெளியிட்ட பதிவில், 'புயலால் அதிகம் பாதிக்கப்பட வாய்ப்புள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதை நமது மீட்புக் குழுவினர் உறுதிப்படுத்தி வருகின்றனர். ஒவ்வொருவரின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக வேண்டிக்கொள்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

பிரதமர் அலுவலகம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், 'புயலால் அதிகம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுக்குமாறும், பாதிப்பு கடுமையாக இருக்கும் பட்சத்தில் மின்சாரம், தொலைத்தொடர்பு, மருத்துவம் மற்றும் குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகள் மக்களுக்கு விரைந்து கிடைப்பதை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், தேவையான பகுதிகளில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறைகளை அமைக்குமாறும் உயர்நிலை ஆய்வுக் கூட்டத்தில் அதிகாரிகளுக்கு பிரதமர் அறிவுறுத்தல் வழங்கினார்' என்று தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மத்திய அரபிக் கடலில் கடந்த 6-ஆம் தேதி உருவான இந்தப் புயல், குஜராத்தின் மாண்டவி நகருக்கும் பாகிஸ்தானின் கராச்சி நகருக்கும் இடைப்பட்ட பகுதியில் வரும் 15-ஆம் தேதி நண்பகலில் கரையைக் கடக்க வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

புயல் கரையை கடக்கும்போது குஜராத் மாநிலத்தின் கட்ச், தேவபூமி துவாரகா, போர்பந்தர், ஜாம்நகர், ராஜ்கோட், ஜுனாகர், மோர்பி மாவட்டங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதோடு, காற்றின் வேகம் மணிக்கு 135 முதல் 145 கி.மீ. வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்திய வானிலை ஆய்வு மைய அகமதாபாத் மைய இயக்குநர் மனோரமா மொஹந்தி கூறுகையில், 'புயல் குஜராத் கடற்கரையை வரும் 15-ஆம் தேதி கரையை கடக்கும்போது, காற்றின் வேகம் 135 முதல் 145 கி.மீ. வேகத்தில் வீச வாய்ப்புள்ளது. அதன் வேகம் 150 கி.மீ. அளவுக்கு அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. குஜராத் மற்றும் சௌராஷ்டிரா-கட்ச் பகுதிகளுக்கு ஜூன் 15 மற்றும் 16-ஆம் தேதிகளில் கன மழைக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் வரும் 16-ஆம் தேதி வரை கடலுக்குள் செல்ல வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது' என்றார்.

**7,500 பேர் இடமாற்றம்:** புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குஜராத்தின் இந்த கடலோர மாவட்டங்களில் கடற்கரையோரம் வசித்துவந்த 7,500 பேர் அவர்களின் குடியிருப்புப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். போர்பந்தரின் 31 கிராமங்களிலிருந்து 3,000 பேரும் தேவபூமி துவாரகா மாவட்டத்திலிருந்து 1,500 பேரும் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கட்ச் மாவட்ட ஆட்சியர் அமித் அரோரா கூறுகையில், 'கட்ச் கடற்கரையோர பகுதிகளிலிருந்து மீனவர்கள் மற்றும் மீனவத் தொழிலாளர்கள் என 3,000 பேர் அவர்களின் குடியருப்புப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு கண்ட்லா பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர். கடற்கரையை ஒட்டிய குடிசைப் பகுதி மக்களும் மாண்டவிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், புயல் கரையை கடக்கும் என கணிக்கப்பட்டுள்ள ஜூன் 15-ஆம் தேதியன்று கடற்கரையிலிருந்து 10 கி.மீ. சுற்றளவில் வசிக்கும் 23,000 பேர், அரசு சார்பில் அமைக்கப்படும் தற்காலிக தங்குமிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவர்' என்றார்.

**144 தடை:** பொதுமக்களின் நலன் கருதி கட்ச் மாவட்டத்தின் கடற்கரையோர பகுதிகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மக்கள் பொது இடங்களில் கூடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கு வரும் 15-ஆம் தேதி வரை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்ச், தேவபூமி துவாரகா, ஜாம்நகர் மாவட்டங்களில் வரும் 15-ஆம் தேதி கன முதல் மிக கன மழை பெய்வதற்கு வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. அதன் காரணமாக, இந்த மாவட்டங்களின் கடற்கரையோரப் பகுதிகளில் முன்னேற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அதிக பாதிப்பு ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்பு படையினர் தயார் நிலையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், ராணுவம், கடற்படை மற்றும் இந்திய கடலோர காவல்படை அதிகாரிகளுடன் மாவட்ட நிர்வாகங்கள் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மழை ஆரம்பம்:** குஜராத்தின் தெற்கு மற்றும் வடக்கு மாவட்டங்களின் கடற்கரையோர பகுதிகளில், குறிப்பாக வல்சத், கிர் சோம்நாத், பாவ்நகர், அம்ரேலி உள்ளிட்ட பகுதிகளில் திங்கள்கிழமை காலை முதல் லேசான மழை ஆரம்பித்தது.

EVA STALIN

# ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு செறிவூட்டப்பட்ட பிஸ்கட் வழங்கும் திட்டம் தொடக்கம்

**விழுப்புரம், ஜூன் 12:** கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு செறிவூட்டப்பட்ட பிஸ்கட் வழங்கும் திட்டத்தை விழுப்புரத்தில் சமூக நலன், மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி. கீதா ஜீவன் திங்கள்கிழமை தொடங்கிவைத்தார்.

சமூக நலன், மகளிர் உரிமைத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில், விழுப்புரம் கீழ் பெரும்பாக்கம் திரௌபதி அம்மன் கோயில் தெரு அங்கன்வாடி மையத்தில் 6 மாதங்கள் முதல் 6 வயது வரை கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு செறிவூட்டப்பட்ட பிஸ்கட் வழங்கும் திட்டத்தை திங்கள்கிழமை காலை தொடங்கிவைத்து, அவர் பேசியதாவது:

6 வயதுக்குள்பட்ட குழந்தைகளின் வளர்ச்சி, ஊட்டச்சத்து கண்காணிப்பை தீவிரப்படுத்தும் நோக்கில், ஊட்டச்சத்தை உறுதி செய்யும் திட்டத்தை சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்து, அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகம் முழுவதும் அங்கன்வாடி மையங்களில் 36 லட்சம் குழந்தைகள் உள்ளனர். இவர்களில் உடல் எடை, உயரம் போன்றவற்றை மருத்துவம், சமூக நலத் துறை அலுவலர்கள் கண்காணித்ததில் 1.40 லட்சம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுகளுடன் இருப்பது கண்டறியப்பட்டது. அவர்களின் பெற்றோரை அழைத்து ஊட்டச்சத்து குறைபாடு குறித்த விவரம் அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இதில் 44 ஆயிரம் குழந்தைகள் உயர் மருத்துவச் சிகிச்சை தேவைப்படுவோர்களாக கண்டறியப்பட்டு, அவர்களுக்குத் தேவையான சிகிச்சையளிக்கப்பட்டது. இன்னும் சிலர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

6 மாதங்கள் முதல் 6 வயதுடைய கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளின் தாய்க்கு ஊட்டச்சத்துப் பெட்டகம் வழங்கப்பட்ட நிலையில், குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துள்ள இணை உணவு வழங்கப்பட்டு அவர்களின் ஊட்டச்சத்து நிலை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

புதிதாக அமைக்கப்பட்ட நிபுணர் குழு பரிந்துரையின் பேரில், கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவையை நிறைவு செய்யும் வகையில், சத்துமாவுக்குப் பதிலாக செறிவூட்டப்பட்ட பிஸ்கட் வழங்கும் திட்டம் விழுப்புரத்தில் திங்கள்கிழமை தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழகத்தில் 1.40 லட்சம் குழந்தைகளும், விழுப்புரம் மாவட்டத்தில் 4,348 குழந்தைகளும் இந்தத் திட்டத்தில் பயன்பெறுவர்.

கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 60 கிராம், 2 முதல் 6 வயதுடைய குழந்தைகளுக்கு 30 கிராம் என்ற அளவில் பிஸ்கட் ஆண்டுக்கு 300 நாள்களுக்கு வழங்கப்படும் என்றார் அமைச்சர் கீதா ஜீவன்.

முன்னதாக, அமைச்சர்கள் க.பொன்முடி, செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

# குறுவை நெல் சாகுபடி தொகுப்புத் திட்டத்துக்கு ரூ.75 கோடி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சேலம், ஜூன் 12:** தமிழகத்தில் நெல் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, உழவர்களுக்கு நடப்பாண்டில் குறுவை நெல் சாகுபடி தொகுப்புத் திட்டம் ரூ. 75.95 கோடியில் செயல்படுத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை திறந்துவைத்தார். பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் வேளாண் உற்பத்தியை உயர்த்தவும், உழவர்களின் வாழ்வை மேம்படுத்தவும், தனி நிதி நிலை அறிக்கை உள்ளிட்ட பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறோம்.

குறிப்பாக, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்தினோம். அதன்மூலம் 2 ஆண்டுகளில் 23.54 லட்சம் உழவர்கள் பயனடைந்துள்ளனர். இதுவரை இல்லாத சாதனையாக, மிகக் குறுகிய காலத்தில் 1.50 லட்சம் இலவச வேளாண் மின் இணைப்புகள் புதிதாக வழங்கப்பட்டுள்ளன.

2022-ஆம் ஆண்டு காவிரி நதி நீரை திறம்பட பயன்படுத்தி நெல் உற்பத்தியை உயர்த்தும் நோக்கத்தில், ரூ. 61.12 கோடியில் குறுவை நெல் சாகுபடி தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

குறுவைப் பருவத்துக்கு தேவைப்படும் குறைந்த வயதுடைய நெல் ரக விதைகள், ரசாயன உரங்கள், உயிர் உரங்கள், பயிர்க்கடன் போன்ற இடுபொருள்களும் டெல்டா மாவட்ட உழவர்களுக்கு உரிய காலத்தில் வழங்கப்பட்டன. இதன் விளைவாக, கடந்த ஆண்டில் குறுவை நெல் சாகுபடி கடந்த 48 ஆண்டுகளில் இல்லாத மிகப் பெரிய சாதனையாக 5.36 லட்சம் ஏக்கரைக் கடந்து, 12.76 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டது.

நடப்பாண்டில் கோடை பருவத்தில் பெய்த மழையால் டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீர் கணிசமாக உயர்ந்தது. மேலும், கடந்த ஆண்டில் மேட்டூர் அணை நீரை மிகவும் கவனமாக பயன்படுத்தியதன் காரணமாக மேட்டூர் அணையின் நீர் இருப்பு தற்போது 103.35 அடியாக உள்ளது. எனவே, மேட்டூர் அணையை குறுவை நெல் சாகுபடிக்காக ஜூன் 12-ஆம் தேதி திறக்க அரசு முடிவெடுத்தது.



குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து திங்கள்கிழமை தண்ணீரைத் திறந்துவைத்து மலர் தூவிய முதல்வர் மு.க.ஸ்டாலின். (இடது) அணை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து மதகுகளிலிருந்து சீறிப் பாய்ந்து செல்லும் தண்ணீர்.

நீர்வளத் துறை கடந்த இரண்டு ஆண்டுகளை போலவே டெல்டா பகுதிகளில் கால்வாய்களைத் தூர் வாரும் பணிகளை மேற்கொண்டது.

நடப்பாண்டில் ரூ. 90 கோடி ஒதுக்கி பணிகளை ஆய்வு செய்து விரைவாக முடிப்பதற்கு கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளன.

தற்போது குறுவை நெல் சாகுபடிக்குத் தேவையான குறைந்த நாள் வயதுடைய நெல் ரக விதைகளும், ரசாயன உரங்களும், உயிர் உரங்களும் அரசு வேளாண்மை விரிவாக்கம் மையங்களிலும், தனியார் கடைகளிலும் இருப்பு வைக்கப்பட்டு, உழவர்களுக்கு உரிய காலத்தில் விநியோகிக்கப்பட்டன.

**1.6 லட்சம் ஏக்கரில் குறுவை நெல் நடவு நிறைவு:** இதன் காரணமாக நிலத்தடி நீரை பயன்படுத்தி இதுவரை 1.6 லட்சம் ஏக்கரில் குறுவை நெல்லில் நடவுப் பணி முடிவடைந்துள்ளது. சமுதாய நாற்றங்கால் அமைத்து காவிரி நதிநீர் வந்தவுடன் நடவுப் பணியை உடனடியாகத் தொடங்கும் வகையில் பணிகள் விரைவாக முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்த நிலையில், மேட்டூர் அணையைத் திறந்து வைத்துள்ளேன்.

**நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்:** பாசன நீரை டெல்டா மாவட்ட உழவர்கள் மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தி இடுபொருள்களை தேவையான அளவு உபயோகித்து நடப்பு குறுவைப் பருவத்தில் நெல் உற்பத்தியை உயர்த்த வேண்டும்.

**ரூ. 75.95 கோடியில் நெல் சாகுபடி தொகுப்புத் திட்டம்:** உழவர்களுக்கு நடப்பாண்டில் ரூ. 75.95 கோடி மதிப்பில் குறுவை நெல் சாகுபடி தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் ஏக்கருக்கு 45 கிலோ யூரியா, 50 கிலோ டிஏபி, 25 கிலோ பொட்டாஷ் என்ற விகிதத்தில் 2.5 லட்சம் ஏக்கருக்குத் தேவையான ரசாயன உரங்கள் முழு மானியத்தில் வழங்கப்படும். மேலும் 1.24 லட்சம் ஏக்கருக்குத் தேவையான நெல் விதைகள் 50 சதவீத மானியத்திலும், மாற்றுப் பயிர் சாகுபடிக்காக 15,818 ஏக்கருக்கு மாற்றுப் பயிர் சாகுபடித் தொகுப்பும், 6,250 ஏக்கரில் பசுந்தாளுர விதைகளும், 747 பவர் டில்லர்களும், 15 பவர் வீடர்களும் மானியத்தில் விநியோகம் செய்வதற்காக மொத்தம் ரூ. 75.95 கோடி மதிப்பில் குறுவை நெல் சாகுபடி சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தினால் நடப்பாண்டில் 5 லட்சம் ஏக்கருக்கும் அதிகமாக குறுவை நெல் சாகுபடி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், உழவர்கள் மற்றும் வேளாண் தொழிலாளர் நலன் காக்க அரசு தொடர்ந்து பாடுபடும் என்றார்.

பேட்டியின் போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# கரோனா தடுப்பூசி செலுத்தியோர் தகவல்கள் கசிவு?

**புது தில்லி, ஜூன் 12:** கரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களின் விவரங்கள் இடம்பெற்ற கோவின் வலைதளத்தில் இருந்து தரவுகள் நேரடியாக கசியவில்லை என்று மத்திய தகவல் தொழில்நுட்ப இணையமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து இந்திய கணினி அவசர நடவடிக்கை குழு ஆய்வு நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் பெயர், கைப்பேசி எண், பிறந்த தேதி, ஆதார் அட்டையின் கடைசி நான்கு எண்கள், எந்தப் பகுதியில் தடுப்பூசி செலுத்தப்பட்டது ஆகிய விவரங்கள் 'டெலிகிராம் பாட்' தளத்தில் சம்பந்தப்பட்டவரின் கைப்பேசி எண்ணைப் பதிவிட்டால் கிடைப்பதாக இணையத்தில் தகவல்கள் வெளியாகின.

இப்படி வெளியான முக்கியத் தலைவர்களின் விவரங்கள் சமூக வலைதளத்தில் பரவி வருகின்றன. இந்தியர்களின் தகவல்கள் கசிவுக்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

## மத்திய அரசு மறுப்பு




இந்நிலையில், கோவின் தரவு பாதுகாப்பு அம்சங்களை உடனடியாக மறுஆய்வு செய்யக் கோரி மத்திய அரசின் இந்திய கணினி அவசர நடவடிக்கை குழுவுக்கு (சிஇ ஆர்டி) மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் அறிவுறுத்தியது.

மேலும், 'கோவின் தகவல் தரவுகள் கசிந்ததாக வெளியான தகவல்களில் எந்தவித அடிப்படை ஆதாரங்களும் இல்லை. கோவின் தரவுகள் பாதுகாப்பாக உள்ளன.

'ஓடிபி' பெறப்பட்ட பிறகுதான் தகவல்கள் தரப்படுகின்றன. தரவு பாதுகாப்புக்கு அனைத்து விதமான பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், இதுகுறித்து சிஇஆர்டி அறிக்கை அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது' என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்தது.

இதுகுறித்து அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் தனது ட்விட்டர் பதிவில், 'கோவின் தகவல் கசிந்ததாக செய்திகள் வெளியானதும், சிஇஆர்டி உடனடியாக பாதுகாப்பை மறுஆய்வு செய்தது. இந்தத் தகவல்கள் நேரடியாக கோவின் தளத்தில் இருந்து கசிந்ததாக தெரியவில்லை.

முன்பு திருடப்பட்ட தகவல்களை சேமித்து வைத்திருக்கும் 'திரட் டாக்டர்' தரவுகளில் இருந்து 'டெலிகிராம் பாட்' கைப்பேசி எண்களை பதிவிட்டதும் வெளியிடுகிறது.

மத்திய அரசு கொண்டு வரும் தேசிய தரவு ஆளுகை திட்டமானது தரவு சேமிப்பு, பயன்பாடு, பாதுகாப்புக்கு பொதுவான வரைமுறையை உருவாக்கும்' என்று தெரிவித்தார்.

இதனிடையே, கோவின் தரவுகளை நேரடியாக பெற்று டெலிகிராம் பாட் அளிக்கவில்லை என்று சிஇஆர்டி அளித்துள்ள முதல்கட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்தது.

கரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் விவரங்களை மத்திய அரசால் உருவாக்கப்பட்ட கோவின் தளத்தில் சேகரிக்கப்பட்டு வந்தன. இந்தத் தரவுகளை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் தங்களின் பதிவுப் பெற்ற கைப்பேசி எண்ணில் இருந்து தகவல் கோரினால் 'ஓடிபி' வழங்கப்பட்டு தகவல் அளிக்கப்படுகிறது.

## விசாரணை நடத்த எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல்

கோவின் தகவல்கள் கசிவு ஏற்பட்டதாக கூறப்படும் விவகாரத்தில் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. தனது தகவல்கள் கசிந்துள்ளதாக கூறியுள்ள காங்கிரஸ் எம்பி கார்த்தி சிதம்பரம், 'கரோனா தடுப்பூசி செலுத்திய ஒவ்வோர் இந்தியரின் தகவல் பொது வெளியில் உள்ளது. இது குற்றகரமான அலட்சியமாகும். யார் இதைச் செய்தார்கள் என விசாரணை நடத்த வேண்டும்' என்றார்.

# எண்ம புரட்சியின் அனுபவங்களைப் பகிரத் தயார்

## ஜி20 அமைச்சர்கள் கூட்டத்தில் பிரதமர் மோடி உரை

**புது தில்லி / வாரணாசி, ஜூன் 12:** எண்ம புரட்சியில் பெற்ற அனுபவங்களை மற்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள இந்தியா தயாராக உள்ளதாக பிரதமர் மோடி கூறினார்.

நவீன தொழில்நுட்பங்களை ஜனநாயகமயமாக்குவதன் மூலமாக மக்களிடையே காணப்படும் தரவு இடைவெளியைச் சரி செய்ய முடியும் என்றும் ஜி20 அமைச்சர்கள் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

ஜி20 கூட்டமைப்புக்குத் தலைமைவகித்து வரும் இந்தியா, அக்கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் அமைச்சர்களுக்கான பல்வேறு கூட்டங்களை வெவ்வேறு நகரங்களில் நடத்தி வருகிறது.

இந்நிலையில், ஜி20 நாடுகளின் மேம்பாட்டுத் துறை அமைச்சர்கள் பங்கேற்ற மாநாடு உத்தர பிரதேசத்தின் வாரணாசியில் திங்கள்கிழமை நடைபெற்றது.

அதில் பிரதமர் மோடி காணொலி வாயிலாக உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

மத்திய அரசின் கொள்கையில் நவீன தொழில்நுட்பங்களும் தரவுகளும் முக்கியப் பங்கு வகித்து வருகின்றன.

சிறந்த கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதற்கும், வளங்களை உரிய வகையில் பகிர்ந்து அளிப்பதற்கும், மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கவும் உயர்ரக தரவுகள் அவசியமாகின்றன. தற்போது மக்களிடையே தரவு இடைவெளி அதிகமாகக் காணப்படுகிறது.


நவீன தொழில்நுட்பங்களை ஜனநாயகமயமாக்குவதன் வாயிலாக அத்தகைய தரவு இடைவெளியைக் குறைக்க முடியும். இந்தியாவில் எண்மமயமாக்கல் நடவடிக்கைகள் பெரும் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. மக்களின் மேம்பாட்டுக்கும், தரவுகளை அணைவரும் அணுகுவதற்கும், ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்துவதிலும் தொழில்நுட்பம் முக்கியக் கருவியாகத் திகழ்கிறது.

எண்மமயமாக்கல் நடவடிக்கைகளில் பெற்ற அனுபவங்களைக் ஒத்த கருத்துடைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள இந்தியா தயாராக உள்ளது.

**முக்கியப் பிரச்னை:** வளர்ச்சியே தெற்குலகின் முக்கியப் பிரச்னையாக உள்ளது. கரோனா தொற்றுப் பரவல் காரணமாக தெற்குலக நாடுகளின் வளர்ச்சி பெருமளவில் பாதிக்கப்பட்டது. சர்வதேச அரசியல் பிரச்னைகள் காரணமாக ஏற்பட்ட உணவு, எரிபொருள், உரங்கள் விநியோகப் பிரச்னை, தெற்குலக நாடுகளுக்கு மேலும் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியது.

அத்தகைய சூழலில், வளர்ந்து வரும் நாடுகளின் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் மேலும் உறுதி செய்யும் வகையிலான பேச்சுவார்த்தைகள் இந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் என நம்புகிறேன்.

ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதற்கான பாதையில் நாடுகள் தொடர்ந்து பயணம் மேற்கொள்ள வேண்டும். இலக்குகளை அடைவதில் நாம் பின்தங்கிவிடக் கூடாது. அந்த இலக்குகளை அடைவதற்கான வலுவான செயல்திட்டத்தை



உலகுக்கு ஜி20 கூட்டமைப்பு எடுத்துரைக்க வேண்டும்.

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதற்குத் தேவையான முதலீடுகளை நாடுகள் மேற்கொள்ள வேண்டும். பல நாடுகள் சந்தித்துவரும் கடன் பிரச்னைகளுக்கும் ஜி20 கூட்டமைப்பு தீர்வு காண வேண்டும்.

**இயற்கைசார் வாழ்க்கைமுறை:** இந்தியாவில் நதிகள், மரங்கள், மலைகள் உள்ளிட்ட இயற்கை அம்சங்களுக்கு அதிக மரியாதை அளிக்கப்பட்டு வருகிறது.

இயற்கை சார்ந்த வாழ்க்கைமுறையையே இந்தியாவின் பண்டைய கலாசாரம் வெளிக்காட்டுகிறது. கடந்த ஆண்டு சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கைமுறை திட்டத்தை ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸுடன் இணைந்து நடைமுறைப்படுத்தினேன்.

அத்திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை ஜி20 கூட்டமைப்பு வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறது. பருவநிலை மாற்றத்தை வெற்றிகரமாக எதிர்கொள்வதில் சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கைமுறை திட்டம் பெரும் பங்களிக்கும்.

**பாலின சமத்துவம்:** மகளிர் மேம்பாட்டுக்கும் பாலின சமத்துவத்துக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஐ.நா. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதற்குப் பாலின சமத்துவம் மிகவும் முக்கியமானது. இந்தியாவில் மகளிர் மேம்பாட்டுக்கு மட்டுமல்லாமல், பெண்களை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்களைப் பெண்களே வகுக்கும் சூழல் உருவாகியுள்ளது.

மகளிரை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஜி20 கூட்டமைப்பு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

**காசியின் சிறப்பு:** ஜனநாயகத்தின் தாய்நகராகத் திகழும் வாரணாசியில் ஜி20 கூட்டம் நடைபெறுவது மிகப் பொருத்தமாக உள்ளது.

அறிவு, விவாதம், கலாசாரம், ஆன்மிகம் ஆகியவற்றின் மையமாக காசி விளங்குகிறது. நாட்டின் பல்வேறு நகரங்களில் இருந்து மக்களை ஈர்க்கும் நகரமாக காசி திகழ்ந்து வருகிறது. இந்தியாவின் பன்முக கலாசாரத்தை அந்நகரம் எடுத்துக்காட்டி வருகிறது என்றார் பிரதமர் மோடி.

# சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி

**சென்னை ஜூன் 12:** சென்னை வடபழனியில் சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினமாக ஜூன் 26-ஆம் தேதி கடைப்பிடிக்கப்படும் நிலையில், சென்னை பெருநகர காவல்துறையின் கீழ் உள்ள 12 காவல் மாவட்டங்களிலும் போதைப் பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்த காவல் ஆணையர் சங்கர் ஜிவால் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவின் அடிப்படையில் தியாகராயநகர் காவல் மாவட்டத்தின் சார்பில் வடபழனி ஆற்காடு சாலையில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் போதைப் பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்ச்சிக்கு தியாகராயநகர் துணை ஆணையர் ஏ.கே.அருண் கபிலன் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் போதைப் பொருள்களுக்கு எதிரான வாசகங்கள் கொண்ட துண்டு பிரசுரங்களை துணை ஆணையர் அருண் கபிலன், பொதுமக்களிடம் வழங்கினார். மேலும், போதைப் பொருள்களுக்கு எதிராக பொதுமக்கள் கையெழுத்திடும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. மேலும் பொதுமக்கள், போதைப் பொருளுக்கு எதிராக உறுதிமொழியும் ஏற்றனர்.

அதோடு, சென்னை பெருநகர காவல் துறையின் பேண்ட் வாத்திய இசை குழுவின் இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

தேசிய அளவில்

# இடைநிலைக் கல்வி இடைநிற்றல் 12.6%

புது தில்லி, ஜூன் 12: தேசிய அளவில் இடைநிலைக் கல்வி மாணவர்கள் இடைநிற்றல் விகித சராசரி 12.6%-ஆக உள்ளதென ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத், பிகார், கர்நாடகம் உள்ளிட்ட 7 மாநிலங்களில் மாணவர்கள் இடைநிற்றல் விகிதம் தேசிய சராசரியை விட அதிகமாக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு செயல்படுத்தி வரும் 'சமக்ர சிக்ஷா' திட்டத்தின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்வதற்கான கூட்டம் அண்மையில் நடைபெற்றது. மத்திய கல்வி அமைச்சகத்தின் சார்பில் கடந்த மார்ச் முதல் மே மாதம் வரையில் பல கட்டங்களாக நடத்தப்பட்ட கூட்டத்தில் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் முக்கிய அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் இறுதியில் ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டது. அதில், தேசிய அளவில் கடந்த 2021-22-ஆம் கல்வியாண்டில் இடைநிலைக் கல்வி அளவில் மாணவர்களின் இடைநிற்றல் விகிதம் சராசரியாக 12.6 சதவீதமாக இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முக்கியமாக, 7 மாநிலங்களில் மாணவர்கள் இடைநிற்றல் விகிதம் தேசிய சராசரியை விட அதிகமாக இருந்ததெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




பிகாரில் இடைநிலைக் கல்வி மாணவர்களின் இடைநிற்றல் விகிதம் 20.46-ஆகவும், குஜராத்தில் 17.85-ஆகவும், அஸ்ஸாமில் 20.3-ஆகவும், ஆந்திரத்தில் 16.7-ஆகவும், பஞ்சாபில் 17.2-ஆகவும், மேகாலயத்தில் 21.7-ஆகவும், கர்நாடகத்தில் 14.6-ஆகவும் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் தொடக்கக் கல்வி அளவில் மாணவர்கள் இடைநிற்றல் விகிதம் குறைந்துள்ளபோதிலும், அது மேலும் குறைய வேண்டியுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இடைநிற்றல் விகிதத்தை மேலும் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பள்ளி அளவில் மாணவர்கள் சேர்க்கை விகிதம் 2030-ஆம் ஆண்டுக்குள் 100 சதவீதத்தை எட்ட வேண்டுமென தேசிய கல்வி கொள்கையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் இடைநிற்றல் விகிதம் அதிகரிப்பது, அந்த இலக்கை அடைவதற்குத் தடையாக இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மத்திய பிரதேசத்தில் 2020-21-ஆம் கல்வியாண்டில் பள்ளி மாணவர்கள் இடைநிற்றல் விகிதம் 23.8-ஆக இருந்த நிலையில், 2021-22-ஆம் கல்வியாண்டில் 10.1-ஆகக் குறைந்துள்ளது. ஆண்டுதோறும் அறிதிறன்பேசி செயலி வாயிலாக சிறப்பு மாணவர் சேர்க்கை நடவடிக்கையை மாநில அரசு மேற்கொண்டு வருவதே இடைநிற்றல் விகிதம் குறைவதற்கு முக்கியக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரத்தில் பள்ளி மாணவர்கள் இடைநிற்றல் விகிதம் 11.2-இல் இருந்து 10.7-ஆகக் குறைந்துள்ளது. ராஜஸ்தானிலும் மாணவர்கள் இடைநிற்றல் விகிதம் தொடர்ந்து குறைந்து வருகிறது. எனினும், பழங்கு[illegible]கள் அதிகமாக [illegible]ளில் இடைநிற்றல் விகிதம் அதிகமாகவே உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.




வீட்டில் உள்ள பணிகள் காரணமாக மாணவிகளின் இடைநிற்றல் விகிதம் தேசிய அளவில் 33 சதவீதமாக உள்ளதாக யுனிசெஃப் கடந்த ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் [illegible]ப்பட்டிருந்தது. பள்ளி[illegible]து இடைநிற்கும் மாணவர்கள், குழந்தைத் தொழிலாளர்களாக மாறுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

https://t.me/NJMepapars

# மீண்டும் யுனெஸ்கோவில் இணைகிறது அமெரிக்கா

பாரிஸ், ஜூன் 12: ஐ.நா.வின் யுனெஸ்கோ அமைப்பில் மீண்டும் இணைய அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

அந்த அமைப்பில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கல்வி, அறிவியல், கலாசார மேம்பாட்டுக்கான ஐ.நா. பிரிவான யுனெஸ்கோவில் பாலஸ்தீனத்தை இணைக்க கடந்த 2011-ஆம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, யுனெஸ்கோவுக்கு அளித்து வந்த நிதியுதவியை அமெரிக்காவும், இஸ்ரேலும் நிறுத்திவைத்தன.

அத்துடன், யுனெஸ்கோ அமைப்பு தொடர்ந்து இஸ்ரேல் விரோதப்போக்கைக் கடைப்பிடித்து வருவதாகக் கூறி, அந்த அமைப்பிலிருந்து விலகுவதாக கடந்த 2017-ஆம் ஆண்டில் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு அறிவித்தது.

இந்த நிலையில், யுனெஸ்கோவில் மீண்டும் இணைய முடிவு செய்துள்ளதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் நிதி ஆதார மேலாண்மைப் பிரிவுக்கான இணையமைச்சர் ரிச்சர்ட் வர்மா யுனெஸ்கோ பொது இயக்குநர் ஆட்ரே அஸுலேவிடம் சமர்ப்பித்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது பாலஸ்தீனத்தின் மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகள் தனி நாடுகளாக இயங்கி வருகின்றன.

எனினும், இஸ்ரேலை பாலஸ்தீனமும், பாலஸ்தீனத்தை இஸ்ரேலும் தனி நாடுகளாக இதுவரை அங்கீகரிக்கவில்லை.




# பிலிப்பின்ஸ்: மேயான் எரிமலையில் சீற்றம்



லெகாஸ்பி, ஜூன் 12: பிலிப்பின்ஸின் மிகத் தீவிரமான எரிமலையான மேயானில் சீற்றம் ஏற்பட்டுள்ளது.

அந்த நாட்டின் அல்பே மாகாணம், லெகாஸ்பி நகருக்கு அருகே அமைந்துள்ள அந்த எரிமலையிலிருந்து நெருப்புப் பிழம்பு வழியத் தொடங்கியுது.

இதையடுத்து, எரிமலை எப்போது வேண்டுமானாலும் வெடிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. எரிமலையைச் சுற்றிலும் 6 கி.மீ. தொலைவில் வசித்து வந்த 12,600-க்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

எனினும், நிரந்தர எரிமலை வெடிப்பு அபாயப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் ஆயிரக்கணக்கானோர் அங்கு தொடர்ந்து தங்கியுள்ளனர். பொதுமக்கள் வசிப்பதற்கு தகுதியற்ற இடம் என்று அந்தப் பகுதி பல ஆண்டுகளுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டும் அவர்கள் அந்த இடத்திலிருந்து வெளியேறாமல் இருந்து வருகின்றனர்.



# உலக சாம்பியன் உருகுவே

**லா பிளாடா, ஜூன் 12:** அர்ஜென்டினாவில் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்டோருக்கான (யு-20) 23-ஆவது உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் உருகுவே 1-0 கோல் கணக்கில் இத்தாலியை வீழ்த்தி கோப்பையை வென்றது.

இந்தப் போட்டியில் உருகுவே சாம்பியன் ஆனது இதுவே முதல் முறையாகும். கடந்த 4 எடிஷன்களாக ஐரோப்பிய அணிகள் ஆதிக்கம் செலுத்தி சாம்பியனாகி வந்த நிலையில், தற்போது தென்னமெரிக்க கூட்டமைப்பைச் சேர்ந்த ஒரு அணி சாம்பியனாகியிருக்கிறது.

இறுதி ஆட்டத்தில் உருகுவே - இத்தாலி அணிகள் விறுவிறுப்பாக மோதினாலும், உருகுவே சற்று ஆதிக்கம் செலுத்தியே வந்தது. அதன் பலனாக 86-ஆவது நிமிஷத்தில் அந்த அணியின் லூசியானோ ரோட்ரிக்ஸ் தலையால் முட்டி கோலடித்து அணியின் வரலாற்று வெற்றிக்கு வித்திட்டார்.

போட்டியிலேயே சிறந்த வீரர் விருதும், அதிக கோல் அடித்தவர் விருதும் இத்தாலியின் சிசர் கசாடெய்க்கு வழங்கப்பட்டது.

# ஆர்ஜென்டீனாவை சாய்த்தது இந்தியா




**இன்தோவென், ஜூன் 12:** சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் புரோ லீக் ஹாக்கி போட்டியில் இந்தியா 2-1 கோல் கணக்கில் ஆர்ஜென்டீனாவை சாய்த்தது.

இந்திய நேரப்படி, ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு நிறைவடைந்த இந்த ஆட்டத்தில் இந்தியாவுக்காக ஆகாஷ்தீப் சிங் (1), சுக்ஜீத் சிங் (13) ஆகியோர் கோலடிக்க, ஆர்ஜென்டீன தரப்பில் டாஸ்கனி லுகாஸ் (57) ஸ்கோர் செய்தார்.

இத்துடன், 2022-23 சீசனுக்கான புரோ லீக் ஆட்டங்களை வெற்றியுடன் நிறைவு செய்திருக்கிறது இந்தியா. தற்போதைய நிலையில் புள்ளிகள் பட்டியலில் இந்தியா 16 ஆட்டங்களில் 8 வெற்றிகளில் பெற்ற 20 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறது.

பிரிட்டன் (26), ஆஸ்திரேலியா (19) முறையே அடுத்த இரு இடங்களில் உள்ளன.

EVA STALIN IAS ACADEMY